# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.33 (L.W.57)

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.Sathish Kumar | Caste | : SC |
| Father's Name | : Mr.T.K.Ekambaram | Calling | : Doctor |
| Village | : Chennai | Religion | : Hindu |
| Taluk | : Chennai | Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.02.2025.

(A1 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 02.33 P.M.**

நான் தற்போது இராஜிவ் காந்தி சென்னை அரசு பொது மருத்துவமனையில் நரம்பயில் அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் 26.06.2015 அன்று சென்னை இராஜிவ் காந்தி சென்னை அரசு பொது மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக இருந்தேன்.

அப்போது ஷமீல் பாஷா என்பவர் 26 வயதான ஆண் சர்ஜிகல் ஐசியூவில் அனுமதிகக்பட்டிருந்தார். மதியம் 3 மணியளவில் அவரை நான் பரிசோதித்தபோது அவர் செயற்கை சுவாச கருவியுடன் உயிருக்கு மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தார். அவருக்கு வலது பக்கம் நுரையீரலில் ஐசிடி டியூப் பொருத்தப்பட்டிருந்தது. மாலை 5 மணிக்கு அவரது இரத்த அழுத்தம் மிகவும் குறைந்துவிட்டது.

அதை உயர்த்துவதற்கான குளோகோமின் என்ற மருந்து அளிக்கப்பட்டது. 05.15 மணிக்கு அவரது இதயம் செயல்படவிரல்லை. அவருக்கு உடனடியாக சிடிஆர் என்னும் சிகிச்சை மூலம் இதயத்தை மீண்டும் இயக்க வைக்க சிகிச்சை மேற்கொள்ளபட்டது. அதற்கான அட்ரோபின், அட்ரீனலீன் மருத்துகளும் செலுத்தப்பட்டன. அரை மணி நேரம் முயற்சிக்கு பிறகும் இதயம் இயங்கவில்லை.

இதனால் 26.06.2015 மாலை 05.45 மணிக்கு அவர் இறந்துவிட்டதாக அறிவித்தேன். அவருடைய முழு கேஸ் சீட்டையும் படித்து அவருக்கு Death summary எழுதினேன். அதில் ஷமீல்பாஷா என்பவர் 19.06.2015-ல் தாக்கப்பட்டதாக சொல்லி அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரக்கு கைக்கு செல்லுதம் பிரேகியல் பிளக்ஸஸ் என்னும் நரம்பில் காயம் ஏற்பட்டிருக்கலாம் என கருதி மேல் சிகிச்சகைக்காக வேலூர் மருத்துவ கல்லூரியிருந்து சென்னை இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

அவர் வரும்போது முழு சியநினைவுடன் இருந்தார். அதீதமான மூச்சு வாங்குதல் இருந்தது. நெஞ்சிலும் வலது தோள் பட்டையிலும் வலி இருப்பதாக கூறியிருந்தார். வலது பக்க கை முழுவதுமாக இயங்கவில்லை. அவருக்கு ரத்த குழாய் வழியாக திரவங்களும், வலிக்கு மருந்தும் ஆரம்பிக்கப்பட்டது.

நெஞ்சிற்கான சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது. அதில் அவருக்கு இரு பக்கமும் நுரையீரல் ஜவ்வில் நீர் கோர்த்திருந்தது (Pleural Effusion) இருந்தது கண்டறியப்பட்டது. அதை வெளியெற்ற இரு பக்கமும் ஐசிடி குழாய் பொறுத்தப்பட்டது.

அவருக்கு பிளாஸ்டிக் சர்ஜன், எலும்பு முறிவு மருத்துவர் மற்றும் நுரையிரல் அறுவை சிகிச்சை நிபுணரின் அறுவுரை பெறப்பட்டது. அவரை தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார். 26.06.2015 அன்று 01.45 மணிக்கு அவரது ஆக்ஜிஜன் அளவு மிகவும் குறைந்ததால், அவருக்கு குழாய் பொறுத்தப்பட்டு செயற்கை சுவாசம் வழங்கப்பட்டது. இருந்தும் அவரது உடல் நிலையில் பின்னடைவு ஏற்பட்டு 05.15 மணிக்கு இதயம் நின்றுவிட்டது.

சிபிஆர் கொடுத்து முயற்சித்தும் எந்த பலனும் இன்றி 05.45 மணிக்கு இறந்துவிட்டார் என்றும் இந்த இறப்புக்கான காரணங்கள் தாக்கப்பட்டதனால் ஏற்பட்ட பிரேகியல் பிளக்ஸஸ் காயம், இருபக்க Pleural Effusion மற்றும் இருதய மற்றும் நுரையீரல் செயலிழப்பு என்று சான்று வழங்கினோம்.

அவருக்கு நான் வழங்கிய Case sheet 7 தாள்கள் கொண்டது அ.த.சா.ஆ.53. அது அசலிலிருந்து எடுக்கப்பட்ட உண்மை நகலாகும். உண்மை நகலை குறியீடு செய்வதற்கு எதிரிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. அதை குறித்து வழக்கின் இறுதி விசாரணையில் வாதுரைக்கலாம் என்று கூறப்பட்டது. வேலூர் சிபிசிஐடி டிஎஸ்பி போலீசார் என்னை சென்னையில் விசாரித்தார்கள்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி: 22.03.2016 அன்று சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தபோது ஷமீல்பாஷா என்பவருடைய அனைத்து மருத்துவ அசல் ஆவணங்களை பார்த்துதான் நான் சொன்னீர்களா?

பதில்: ஆம்.

கேள்வி: அசல் ஆவணங்களை பார்த்துதான் சொன்னேன் என்று போலீசார் வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறீர்களா?

பதில்: ஆமாம்.

கேள்வி: என்ன வரியில் சொல்லப்பட்டுள்ளது ?

பதில்: Case sheet ஐ பார்த்து சொல்லியுள்ளதாக உள்ளது. அசலை பார்த்ததாக அதில் சொல்லவில்லை.

கேள்வி: என்னுடைய முதல் விசாரணையில் நோயாளி சுயநினைவுடன் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதை போலீசிடம் சொல்லியுள்ளேனா?

பதில்: சொல்லவில்லை.

கேள்வி: மூச்சு திணறலுடன் நோயாளி இருந்ததாக முதல் விசரணையில் சொல்லியுள்ளதை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா?

பதில்: இல்லை.

கேள்வி: சிடிஸ்கேன் எடுத்தேன் என்று முதல் விசாரணையில் சொல்லியதை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா?

பதில்: இல்லை.

கேள்வி: ஐசிடீ பொறுத்தினேன் என்று முதல் விசாரணையில் சொல்லியதை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா?

பதில்: இல்லை.

கேள்வி: ஐசியூ க்கு மாற்றினோம் என்று முதல் விசாரணையில் சொல்லியதை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா?

பதில்: இல்லை.

கேள்வி: உயிருக்கு ஆபத்தான நிலையில் நோயாளி இருந்தார் என்று முதல் விசாரணையில் சொல்லியதை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா?

பதில்: இல்லை.

கேள்வி: சுயநினைவோடு இருந்தார் என்று யார் சொன்னது?

பதில்: Case sheet ஐ பார்த்து நான் எழுதினேன்.

Q: In Exh.P.53 all the averments available in the 7 sheets are not written by my own hand writting ?

A: Yes. As per the regular procedure all this pages were written by my students as per my instructions and dictation and they were verified by me and signed.

Q: Who are all the students?

A: My Post Graduate M.S. general surgery students.

Q: Have you stated the above facts in my chief examiation ?

A: No.

Q: Tell the name of your students?

A: I can not recall my memory.

Q: Whether the statement in 3rd sheet written by Dr.Krishnamoorthy was my student?

A: No. He was my colleague. In this pages staff nurses, casualty medical officer have also written.

Q: On 26.06.2015 how many times you have checked the patient?

A: Patient was continuously under my care in surgical intensive care unit.

Q: What is the exact time I inspected the patient?

A: At 03.00 p.m. on 26.06.2015 I examined the patient. Again when his B.P. fell at 05.00 p.m. I examined the patient once he went into Cardio pulmonary arrest at 05.15 p.m. I was continuously giving CPR and medicines till his death at 05.45 p.m.

Q: Have you signed in anywhere in 3rd sheet?

A: No.

Q: Have your students signed anywhere in that sheet?

A: No. I have verified page 5, 6,7 and signed on page no.7.

Q: Whether it was stated in my chief examination?

A: No.

Q: Have you written anything in page no.1 in sheet no.1?

A: No. It was written by my students.

Q: Have you signed in anywhere in page no.3?

A: No. It was written by my students.

Q: Have you signed in anywhere in page no.3?

A: Yes. I have signed in the page where the medical officer has to sign.

Q: In first page is there any place to sign medical officer?

A: No.

Q: Have you agreed that Dr.Krishnamoorthy examined the patient on 26.06.2015 at 01.00 a.m.?

A: Yes. As per case sheet Dr.Krishnamoorthy, who was the Emergency Medical Officer (EMO), at that time examined the patient.

Q: In page no.6 of Exh.P.53 at the bottom what was written by Dr.Krishnamoorthy?

A: He written as no external injury.

Q: Whether police has given any requisition letter to the hospital asking the patients medical record?

A: I have no idea.

Q: Do you know that the documents to be given to the police through a covering letter?

A: I don't know.

Q: Whether have you seen any such letter (Regarding the patient medical records issued by government hospital, Ambur to the CBCID police, Vellore) issued by your hospital at Chennai to the CBCID?

A: No.

Q: Have you heard about the patient Shameel Basha medical records originals were already give to CBCID police when police examined you?

A: No.

Q: Do you agree that Dr.Krishnamoorthy has written in page no.6 of Exh.P.53 on 26.06.2015 at 01.00 a.m. that assault by 6 known persons?

A: Yes.

Q: Kindly see the page no.5 (Medical report of Shameel Basha I.P.No.4913/MLC in 4 th line from top assaulted by one known person on 18.06.2015 is written in words in prosecution document no.51, do you agree it?

A: Yes.

Q: In Exh.P.53 it is stated that 6 known persons assaulted the patient on 19.06.2015, what you want to say?

A: It is there.

Q: How many injuries are noted in the medical report of Shameel Basha issued by Government hospital, Ambur?

A: Three.

Q: Have you taken any MRI to the patient?

A: No.

Q: Have you seen any MRI of the patient?

A: No. In the Discharge summary issued by Vellore hospital reveals that MRI scan was taken at Vellore hospital.

Q: Have you given the MRI film of the patient to the police?

A: No.

Q: Prosecution list of document no.53 issued by Rajiv Gandhi Medical College Hospital, Chennai to the CBCID police, some whitener have been applied to hide the date, seal affixed already and below that another date seal of 18.06.2019 affixed, do you agree?

A: Yes.

Q: In that same letter at the top and bottom the date has been rounded off, do you agree?

A: Yes.

Q: Do you agree in the body of said letter it is stated attested copies enclosed?

A: Yes.

Q: As per said letter do you agree in March 2016 the original medical records was available in the Senior medical record officer at Rajiv Gandhi Medical college and hospital, chennai?

A: Yes.

Q: Is there any averments in that letter that the original medical records was maintained for future?

A: No.

Q: Do you agree that all the documents were attested by senior medical record officer?

A: Yes.

Q: Do you know that original Medical records of the patient connected to a criminal case should be preserved till the case is disposed?

A: Yes.

இடைவேளைக்காக குறுக்கு விசாரணை சற்று நேரம் ஒத்திவைக்கப்படுகிறது நேரம் மாலை 05.00 மணி.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி நேரம் மாலை 05.10 மணி

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

2015 காலகட்டத்தில் நான் General surgery ல் Assistant Professor ஆக இருந்தேன். ஆகஸ்ட் 2015 இருந்து ஆகஸ்ட் 2018 வரை அதே இராஜவ் காந்தி மருத்துவமனை மற்றும் கல்லூரியல் M.Ch. regular course– ல் படித்து வந்தேன்.

ஒவ்வொரு துறை சார்ந்த நோய்களுக்கு அந்த துறை சார்ந்த மருத்துவர்கள் சிகிச்சை அளிப்பார்கள். அ.த.சா.ஆ.53–ல் சொல்லப்பட்டுள்ளது என்னுடைய கருத்துரை இல்லை. சிகிச்சை அளித்ததிற்காக தரப்பபட்டது. வார்டு எண் 213 general surgery ஆகும்.

அதில் General Surgent இருப்பார். நான்தான் அந்த வார்டுக்கு அந்த காலகட்டத்தில் General Surgen ஆக இருந்தேன். Assistant Professor–ன் கடமை என்பது மாணவர்களோடு அன்று ஒதுக்கப்பட்ட நோயாளியை பரிசோதிப்பது, ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட குறிப்புகள் எடுப்பது பின்னர் மாணவர்களுக்கு பாடம் சொல்லி கொடுப்பதாகும்.

Assistant Professor பணி நேரம் காலை 9 முதல் மதியம் 2 மணி வரை எங்களுக்கு வார்டில் உள்ள நோயாளிகளை பார்ப்பது பணியாகும். சுழற்சி முறையில் அவசர சிகிச்சை பிரிவில் பணி பார்ப்போம். அசாதாரண சூழ்நிலையில் அழைக்கும்பட்சத்தில் மற்ற நோயாளிகளை பார்க்க வேண்டும். கல்லூரியில் பேராசிரியராக இருக்கும்போது வருகை பதிவேடு உண்டு. General Surgen ஆக பணியாற்றுவதற்கு duty roster உண்டு.

அதை என் துறை தலைவர் கொடுப்பார். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நோயாளி எங்கள் துறையான General surgery–ல் தான் அனுமதிக்கப்பட்டார். நோயாளிக்கு நான் எந்தவித அறுவை சிகிச்சையும் செய்யவில்லை. மற்ற மருத்துவர்கள் கொடுத்த பரிந்துரையின் பேரில் மருத்துவம் பார்த்தேன். சிபிசிஐடி போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் மேலே சொன்னவாறு குறிப்பிட்டு சொல்லவில்லை.

நீதிமனற்த்தில் கொடுத்த சாட்சியத்திற்கும் சிபிசிஜடி போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கும் முன்னுக்கு பின் முரண் உள்ளது என்றால் சரியல்ல. 26.06.2015 அன்று மதியம் 02.00 மணியிலிருந்து மாலை 05.45 மணி வரை நான் அந்த நோயாளிக்கு

மருத்துவம் பார்த்தபோது மற்றொரு மருத்துவரிடம் எந்த ஒரு கருத்துரையும் நான் வாங்கவில்லை. அதைத்தான் போலீஸ் வாக்குமூலத்திலும் சொல்லயுள்ளேன். மற்ற மருத்துவர்கள் நோயாளிக்கு எங்கள் மருத்துவமனையில் கொடுத்த வைத்தியத்தின் அடிப்படையிலும், case sheet–ல் எழுதப்பட்ட குறிப்புகளின் அடிப்படையில் நான் death summary தயாரித்தேன்.

மதியம் 02.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை நோயாளிக்கு மற்ற மருத்துவர்கள் யாரும் மருத்துவர்கள் மருத்துவம் பார்க்கவில்லை நான் மட்டும்தான் பார்த்தேன். நோயாளிக்கு ஒவ்வொரு துறை சார்ந்த வல்லுநர்கள் அவரை பரிசோதித்து case sheet–ல் எழுதிய குறிப்புகளின் படி மதியம் 02.00 மணிமுதல் மாலை 05.45 மணி வரை மற்ற expert மருத்துவர்கள் நாயாளியை பார்க்காமல் நான் மட்டுமே அவருக்கு மருத்துவம் பார்த்திருக்க முடியாது என்றால் சரியல்ல.

நான் general surgen என்பதால் அவருக்கு சிகிச்சை அளிக்க எனக்கு தகுதி மற்றும் திறமை உள்ளது. ஒவ்வொரு துறை சார்ந்த மருத்துவரகள் ஒரு நோயாளிக்கு தனித்தனியாக case sheet தயாரிப்பார்களா என்றால் இல்லை. ஒரே case sheet–ல் அந்தந்த மருத்துவர்கள் நோயின் குறிப்புகளை எழுதுவார்கள்.

மற்ற துறைகளில் சிகிச்சைக்கு நோயாளியை கொடுத்துவிட்டால் அந்த துறை சார்ந்த மருத்துவர் நோயாளியை take over செய்துகொண்டால் நோயாளியின் case sheet அந்த மருத்துவரிடம் ஒப்படைக்கப்படும். நோயாளியை நல்லிரவு 01.00 மணிக்கு அவசர சிகிச்சை பிரிவில் இருந்த மருத்துவ அதிகாரி பொது அறுவை சிகிச்சை

பிரிவுக்கு அனுப்பிவைத்துள்ளார். நான் மறுநாள் மதியம் 02.00 மணிக்கு பொது அறுவை சிகிச்சை பிரிவுக்கு பணி பொறுப்பை எடுத்துக்கொண்டேன். அ.த.சா.ஆ.53 ல் நோயாளியை எங்கள் பிரிவுக்கு referral செய்ததாக குறிப்பு எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

நோயாளியை வேறு துறை சார்ந்த வல்லுநரிடம் கருத்துரை பெற அனுப்பும்பாது case sheet-ல் referred to so and so department என்று எழுதுவோம். Opinion கொடுப்பதற்கும் referred to என்று எழுத வேண்டும் என்றால் சரிதான். நான் opinion கொடுப்பதற்கு referred to என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அது தேவை இல்லை.

மதியம் 02.00 மணி முதல் மாலை 05.45 மணி முதல் நான் நோயாளிக்கு எந்தவித சிகிச்சையும் அளிக்க வில்லை என்றாலும் யாரோ எழுதியதற்கு நான் கருத்துரை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

சிபிசிஐடி போலீசார் என்னை விசாரிக்கும்போது நோயாளியின் மருந்து மாத்திரைகள் கொடுத்ததற்கான எழுதப்பட்டு prescription sheet ஐ கொடுத்தேனா என்றால் இல்லை. அ.த.சா.ஆ.53 case sheet ல் referral இல்லாததால் அது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை- இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 06.17 மணி.**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.06 18:36:02 +0530